| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 87/2023 |
| **DATE** | : | **16.12.2024** |
| **NAME** | : | **ஜெயசீலன்** |
| **FATHER'S NAME** | : | **நடராஜன்** |

**<u>பி..சா.1, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தின் சர்வே எண்.441/3 , மொத்த விஸ்தீரனம் 33 செண்ட் ஆகும். தாவா சொத்து ஆதியில் என் தாயார் பாப்பாத்தி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்து வாதி கங்காதரனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.தாவா சொத்தில் கங்காதரன் வீடு கட்டி அனுபவித்து வருகிறார். என் தாயார் ஒரு உயில் ஆவணத்தின் மூலம் தாவா சொத்தை வாதிக்கும் எனக்கும் கொடுத்தார். என் தாயார் காலமாகிவிட்டார். பாப்பாத்தி அம்மாள் இறந்த பின்பு வாதிதான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்து காலிமனையாக தான் உள்ளது. நானும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து தாவா சொத்தை அனுபவிக்க முயன்றதால் தான் வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**<u>பி.சா.1 யை 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதி என்னுடன் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றாலும் தற்போது வரை நீதிமன்றத்திற்கு இருவரும் ஒன்றாக தான் வந்து செல்கிறோம் என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி எந்த சொத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் மற்றும் அந்த சொத்தின் சர்வே எண், நீள அகலம் மற்றும் விஸ்தீரனம், நான்கு புற எல்லை ஆகியவை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விவரம் எனக்கு தெரியாது என்று நான் தற்போது சாட்சியம் அளிக்கும் நிலையில் முன்பு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது தாவா சொத்து வாதி கங்காதரனுக்கு பாத்தியப்பட்ட சொத்து

என்றால் சரிதான் என்று எவ்வாறு சாட்சியம் அளித்தேன் என்றால் சர்வே எண். 441/3 ல் உள்ள மொத்தம் 33 செண்ட் விவரம் எனக்கு தெரியாது. என் அம்மா உயில் எழுதிய வகையில் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து சொந்தம் என்று அவ்வாறு சாட்சியம் அளித்தேன். என் தாயார் எழுதி வைத்த உயிலின் படி வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண்.441/3 ல் அதன் மொத்த விஸ்தீரனம், நீள அகலம் மற்றும் நான்கு புற எல்லைகள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் தாயார் எழுதி வைத்த உயிலின் படி எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண்.441/3 ல் அதன் மொத்த விஸ்தீரனம், நீள அகலம் மற்றும் நான்கு புற எல்லைகள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் 6 செண்ட் இடம் கொடுத்தார், வடக்கு புறம் ரோடு உள்ளது, கிழக்கு புறம் கங்காதரன் இடம் உள்ளது, மேற்கு புறம் வெங்கடேசன் இடம் உள்ளது தெற்கு புறம் காலியாக உள்ளது அவர் பெயர் எனக்கு நினைவில்லை. நீள, அகலம் எனக்கு சரியாக நினைவில்லை. வா.சா.ஆ.2 உயிலில் ஏ ஷெட்யூலில் கண்ட சொத்தில் 6 செண்ட் இடம் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளதில் நீள அகலம் மற்றும் நான்கு புற எல்லை விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயிலில் பி ஷெட்யூலில் கண்ட சொத்தில் வாதிக்கு கொடுக்கப்பட்ட 3 செண்ட் இடத்தில் நீள அகலம் மற்றும் நான்கு புற எல்லை விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய சகோதரி பரமேஷ்வரி, சிவகாமி மற்றும் சகோதரர் புண்ணியக்கோட்டி ஆகியவர்களுக்கு கொடுக்கப்பட்ட சொத்திலும் நீள அகலம் மற்றும் நான்கு புற எல்லை விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கடந்த 26.10.2009 அன்று என் தாயார் பாப்பாத்தி அம்மாள் என் பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் என் தாயார் நான்கு புற எல்லை விவரம் குறிப்பிட்டு எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அந்த ஆவணம் தான் மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 06.01.2023 தேதியிட்ட நான் என் மகள் ரம்யாவிற்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பி.சா.ஆ.4 என் தாயார் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் முன்னிலைக்கு எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ– 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் என் மகளுக்கு எழுதி கொடுத்த பி.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தில் வடக்கில் வஜ்ஜிரவேல் மனை, தெற்கில் 5 அடி நாராசந்து, கிழக்கில் விஜய் அவர்களின் மனை, மேற்கில் இன்று செட்டில்மெண்ட் செய்யப்படும் ராஜேஷ் அவர்களின் மனை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் என் மகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் 4 ல் நான்கு புற சக்குபந்தி பற்றி குறிப்பிடும் போது கிழக்கில் விஜய் அவர்களின் மனை என்று குறிப்பிட்டுள்ளது இந்த வழக்கின் 2 வது பிரதிவாதி விஜய் என்றால் சரிதான். நான் என் மகன் மற்றும் மகளுக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் என் தாயார் எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் முன்னிலைக்கு தான் எழுதி கொடுத்தேன் என்றாலும் என் தாயார் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை போன்று வாதியை தவிர்த்து எனது சகோதரிகள் பரமேஷ்வரி, சிவகாமி மற்றும் எனது சகோதரர் புண்ணியகோட்டி ஆகியோருக்கும் நான்குபுற எல்லைகள் குறிப்பிட்டு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் எழுதி கொடுத்திருக்கலாம் ஆனால் எனக்கு தெரியாது. என் தாயார் வாதி கங்காதரனுக்கு நான்கு புற எல்லை குறிப்பிட்டு அல்லது குறிப்பிடாமல் எந்த செட்டில்மெண்ட் ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் எழுதி வைத்த உயிலில் கண்டுள்ள மற்ற சர்வே எண்கள் 156/3 ஏ1 மற்றும் 156/3 பி1 ஆகிய சர்வே எண்களில் கண்டுள்ள 40 செண்ட் நிலத்தை அவர் உயிருடன் இருந்த போதே விற்றுவிட்டார் என்றாலும் அந்த சொத்து

உயிலின் படி எங்களுக்கு வந்தடையவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நான் சொத்து எதுவும் விற்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் என் தாயார் பாப்பாத்தி அம்மாளிடம் இருந்தும் என் சகோதரி சிவகாமியிடம் இருந்தும் நான்குபுற எல்லை, நீள அகலம் குறிப்பிட்டு கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னுடைய சொத்திற்கு கிழக்கேயும் சிவகாமியின் சொத்திற்கு மேற்கேயும் அனுபவித்தில் உள்ளார்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுடைய இடத்தை மண் கொட்டி உயரம் தூக்கி நான்கு புறமும் சிமெண்ட் தூண் நட்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் மண் கொட்டி உயரம் தூக்கி உள்ளார்கள், சிமெண்ட் தூண் நட்டுள்ளார்களா என்று எனக்கு தெரியாது. தாவா சர்வே எண்ணில் கண்டுள்ள 33 செண்ட் இடமானது செட்டில்மெண்ட் ஆவணம் படியும் கிரையம் படியும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார் யார் பெயருக்கு அந்த சொத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளதோ அவர்கள் பெயருக்கு பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் அவ்வாறு பட்டா தாக்கலாகி உள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். என்னுடைய பெயரில் 1 செண்டிற்கு பட்டா தாக்கலாகி உள்ளது, என் மகன் பெயரில் 2 செண்ட்டும், மகள் பெயரில் 2 செண்ட்டும் பட்டா தாக்கலாகி உள்ளது. வருவாய் துறையினர் வந்து இடத்தை பார்வையிட்டு அளந்து தான் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆன்லைன் மூலமாகவே பட்டா மாற்றம் செய்யப்பட்டது. என்னுடைய சகோதரர் கங்காதரன் எண். 6 அம்பேத்கர் நகரில் தான் வசித்து வருகிறார் என்றால் இல்லை, தற்போது வேறு இடத்திற்கு வந்துவிட்டார். தாவா சொத்திற்கு அருகில் உள்ள வீடு யார் கட்டியது, எப்போது கட்டியது என்றால் என் அம்மா கட்டியது. என் அம்மா 3 வருடம் முன்பு காலமாகிவிட்டார். அவர் இறப்பதற்கு 5 வருடம் முன்பு அந்த வீடு கட்டப்பட்டது. அந்த வீடு எனக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கப்பட்ட இடத்தில் தான் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடு

குறித்து தான் தற்போதைய வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட அந்த வீட்டில் தற்போது யார் அனுபவித்து வருகிறார் என்றால் வாதி தான் அனுபவித்து வருகிறார். என்னுடைய இடத்தில் வாதி வீடு கட்டி அனுபவித்து வருவது குறித்து எனக்கு ஆட்சேபனை உண்டா என்றால் அது குறித்து வாதியிடம் கேட்டபோது வாதி அதற்காக பணத்தை கொடுப்பதாக என்னிடம் தெரிவித்தார். நான் என் மகளுக்கு எழுதி கொடுத்த பி.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தில் ரம்யா இடத்திற்கு மேற்கே ராஜேஷ் இடமும் , ராஜேஷ் இடத்திற்கு மேற்கே 1 செண்ட் மீதி இடமும் இருப்பதாக வரைபடம் உள்ளது  என்றால் அந்த வரைபடம் பற்றி எனக்கு தெரியவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.R.Rajeswari)
Principal District Munsif,
Kancheepuram.